# மார்ச், 2017 – எண்ணெய் பனை சாகுபடிக்கான ஆலோசனைகள்

- 2 அடி நீளம், 2 அடி அகலம், 2 அடி ஆழம் கொண்ட குழிகளில் எண்ணைய்ப்பனையை நடவு செய்ய வேண்டும்.

- அவ்வாறு நடவு செய்யும் முன், அடிஉரமாக ஒரு கூடை தொழு உரம், 400 கிராம் சிங்கிள் சூப்பர் பாஸ்பேட், 50 கி ஃபோரேட் கலவையை நன்கு கலந்து பின் நடவு செய்யவேண்டும்.

- நாற்றங்காலில் இருந்து கொண்டுவரப்பட்ட பனை கன்றுகளை தேக்கி வைக்காமல் உடனடியாக குழிகளில் நடவு செய்திட வேண்டும்.

- குழியை சுற்றி 1 மீ ஆராதிற்கு பாத்தி அமைத்து நடவு செய்தவுடன் நீர் பாய்ச்ச வேண்டும். ஒவ்வொரு மரத்தின் பாத்தியையும் முக்கிய கால்வாய் உடன் தனித்தனியே இணைக்க வேண்டும்.

- வட்டப்பாத்தி அமைக்கும் போது ஒரு வயது பனைக்கு 1 மீ ஆரம், இரண்டு வயது பனைக்கு 2 மீ ஆரம், மூன்றாவது வருடத்தில் இருந்து 3 மீ ஆரம் கொண்ட பாத்தி அமைத்து நீர்ப்பாய்ச்ச வேண்டும்.

- கோடையில், இலகுவான மண்ணிற்கு, தேவையான நீரை குறைத்த இடைவெளியில் அதிகமுறை பாய்ச்ச வேண்டும்.